# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2088/52 - 2018 සැප්තැම්බර් මස 12 වැනි බදාදා - 2018.09.12

*2088/52 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 12 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

***1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)***

*7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்*

*எனது இல.:* BKP/LAND/ACQUI/A3/22.
*காணி அமைச்சின் கோவை இல.:* 4-3/ 15/ 2016/ VE/317.

*புலத்கொஹுபிட்டிய பிரதேச செயலாளர் பிரிவில், 2016 ஆம் ஆண்டில் மண் சரிவின் மூலம் அகதிகலான மக்களை மீளக்குடியேற்றுவதற்காக காணி எடுத்தல் யட்டிதேரிய தோட்டம் - ரங்கல்ல லப்பான பிரிவு எனும் காணி இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித் துண்டுகளை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.*

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

*சப்பிரகமுவ மாகாணத்தின் கேகாலை மாவட்டத்தில், புலத்கொஹுபிட்டிய பிரதேச செயலகப் பிரிவில், ரங்கல்ல கிராம அலுவலர் பிரிவில், ரங்கல்ல கிராமத்தில் அமைந்துள்ள கேகாலை நில அளவை அத்தியட்சகரின் ஆ. வ. கே. 3582 ஆம் இலக்க ஆரம்ப வரைபடத்தில் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள 3 (1, 2, 3) காணித் துண்டுகளாகும்:*

*நட்டஈட்டு உரித்தின் பரிசீலனைத் திகதி :*

*ஆ. வ. கே. 3582 இல் வரைபடத்தில் கே. 03 ஆம் இலக்கத்திற்காக 2018. 10.30 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு*

*1.* **துண்டு இல. 01, 02, 03**

*காணியின் பெயர் : யட்டிதேரிய தோட்டம் - ரங்கல்ல லப்பான பிரிவு; உரிமை கோருவோரின் பெயர் மற்றும் முகவரி: 1. காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு, இல. 475, கடுவலை வீதி, பத்தரமுல்லை, 2. முகாமைத்துவப் பணிப்பாளர், கேகாலை பெருந்தோட்டக் கம்பனி, இல. 310, ஹைலெவல் வீதி, மஹரகம, 3. பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு, இரண்டாம் மாடி, செத்சிறிபாய, இரண்டாம் கட்டம், பத்தரமுல்லை ; விஸ்தீரணம் : 4.0516 ஹெக்டயார்.*

*மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு புலத்கொஹுபிட்டிய பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 23 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.*

*ஜே. எம். ரம்யா ஜயசுந்தர,*
*பிரதேச செயலாளர்,*
*புலத்கொஹுபிட்டிய.*

*பிரதேச செயலகம்,*
*புலத்கொஹுபிட்டிய,*
*2018, செத்தெம்பர் 05.*

*9 - 762*